2020 ஜனவரி 9]

நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சிறப்புத் திட்டங்கள் செயலாக்கத் துறை அமைச்சர் அவர்கள்.

19—

மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி

***18491—திரு. அ. பிரபு:**

மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சிறப்புத் திட்டங்கள் செயலாக்கத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கள்ளக்குறிச்சி தொகுதி, கள்ளக்குறிச்சி ஊராட்சி ஒன்றியம், காட்டானந்தல் ஊராட்சியில், 30,000 லிட்டர் கொள்ளளவுள்ள மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி அமைக்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

மாண்புமிகு திரு. எஸ்.பி. வேலுமணி, நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சிறப்புத் திட்டங்கள் செயலாக்கத் துறை அமைச்சர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,*

(அ) மற்றும் (ஆ) கள்ளக்குறிச்சி தொகுதி, கள்ளக்குறிச்சி ஊராட்சி ஒன்றியம், காட்டானந்தல் ஊராட்சியில் ஏற்கெனவே, 60,000 லிட்டர் கொள்ளளவு கொண்ட ஒரு மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டியும், 30,000 லிட்டர் கொள்ளளவு கொண்ட இரண்டு மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டிகளும் பயன்பாட்டில் உள்ள நிலையில், கூடுதலாக ஒரு புதிய மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி அமைக்க வேண்டிய அவசியம் தற்போது எழவில்லை என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. அ. பிரபு அவர்கள்.*

திரு. அ. பிரபு: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 'இருந்தாலும், மறைந்தாலும் பேர் சொல்ல வேண்டும், இவர்போல யாரென்று ஊர் சொல்ல வேண்டும்' என்ற பாடலுக்கு இலக்கணமாக வாழ்ந்த புரட்சித் தலைவி அம்மா அவர்கள் துயில் கொண்டிருக்கும் திசைநோக்கி வணங்குகிறேன். கடந்த வருடம் நேற்றைய நாளானது கள்ளக்குறிச்சி மாவட்ட மக்களுக்கு மிகுந்த சந்தோஷத்தை ஏற்படுத்திய நாள். ஆம். கள்ளக்குறிச்சியை தலைமையிடமாகக் கொண்டு, ஒரு புதிய மாவட்டத்தை*

உருவாக்கித் தந்த நமது மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள்தான் இதற்குக் காரணம். ஓராண்டு முடிந்து அடுத்த ஆண்டு முதல் நாளில் அடியெடுத்து வைக்கும் இந்த நேரத்திலே எனக்குப் பேச வாய்ப்பளித்த மாண்புமிகு சபாநாயகர் அவர்களுக்கு நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். நமது முதலமைச்சர் அவர்கள் சிறப்பான ஆட்சி நடத்திக் கொண்டிருப்பதற்கு உறுதுணையாக இருக்கின்ற நமது துணை முதலமைச்சர் அவர்களுக்கும், இந்த மாவட்டம் உருவாவதற்கு முழுமுதல் காரணமாக இருந்த எனது மாவட்டத்தின் அமைச்சர் அவர்களுக்கும், மாவட்டக் கழகச் செயலாளர் அவர்களுக்கும், பொதுமக்களுக்கும் இந்த நேரத்திலே நான் நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

கள்ளக்குறிச்சி தொகுதி, காட்டானந்தல் ஊராட்சியிலே மாண்புமிகு அமைச்சர் அவர்கள் கூறியதுபோல், 60,000 லிட்டர் கொள்ளளவு கொண்ட OHT ஒன்றும், 30,000 லிட்டர் கொள்ளளவு கொண்ட OHT இரண்டும் இருக்கின்றன. ஆனால், இந்த 60,000 லிட்டர் கொள்ளளவு கொண்ட OHT காட்டானந்தல் ஊராட்சியிலும், 30,000 லிட்டர் கொள்ளளவு கொண்ட இரண்டு OHT–கள் hamlet-லும் இருக்கின்றன. அந்த ஊராட்சியிலே சுமார் 2,945 மக்கள் இருக்கும் காரணத்தினால், அந்த 60,000 லிட்டர் கொள்ளளவு கொண்ட tank போதுமானதாக இல்லை. எனவே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் மேலும் ஒரு OHT–ஐ அமைப்பதற்கு நடவடிக்கை எடுக்குமாறு அன்போடு கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சிறப்புத் திட்டங்கள் செயலாக்கத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. எஸ்.பி. வேலுமணி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கள்ளக்குறிச்சி தொகுதி, கள்ளக்குறிச்சி ஊராட்சி ஒன்றியத்தைச் சேர்ந்த, . . . (குறுக்கீடு)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் வாய்ப்பு வேண்டுமென்றால் கையை மட்டும்தான் தூக்க வேண்டும். மாண்புமிகு பேரவைத் தலைவர் என்று அழைக்கக் கூடாது.

மாண்புமிகு திரு. எஸ்.பி. வேலுமணி: காட்டானந்தல் ஊராட்சியிலே உள்ள மக்கள் தொகை 2,994 ஆகும். நான் குறிப்பிட்டவாறு 60,000 லிட்டரும், 30,000 லிட்டரும் கொள்ளளவு

2020 ஜனவரி 9]

கொண்ட நீர்த்தேக்கத் தொட்டிகள் இருக்கின்றன. அதேபோல, 1,000 லிட்டர் கொள்ளளவு கொண்ட 13 சிறு மின்விசைப் பம்புகளும் மற்றும் 13 கைப்பம்புகளும் உள்ளன. இவற்றின்மூலம் நீர்த்தேக்கத் தொட்டிகளில் காலை மற்றும் மாலை என இரண்டு வேளைகளிலும் நீரேற்றம் செய்யப்பட்டு, சராசரியாக தனி நபர் ஒருவருக்கு 82 லிட்டர் வீதம் குடிநீர் வழங்கப்படுகிறது. 2017–2018 ஆம் ஆண்டில் பொது நிதியின்மூலம் ரூ.4.51 இலட்சம் மதிப்பீட்டில் திறந்தவெளிக் கிணறு ஆழப்படுத்தும் பணியும், 3 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில் ஆழ்துளைக்குழாய் மற்றும் குடிநீர்க் குழாய் பணியும் நிறைவேற்றப்பட்டுள்ளன. மேலும், 4.5 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில் திறந்தவெளிக் கிணறு ஆழப்படுத்தும் பணி 14–வது நிதிக் குழு திட்டத்தின்மூலம் மேற்கொள்ளப்பட்டு வருகிறது. இவற்றின் காரணமாக போதுமான நீராதாரம் உருவாக்கப்பட்டுள்ளதால், காட்டானந்தல் ஊராட்சிப் பகுதியில் தனி நபருக்கு வழங்கப்பட வேண்டிய சராசரி குடிநீர் அளவைவிட தற்போது கூடுதலாக வழங்கப்படுகிறது. அதனால்தான் காட்டானந்தல் ஊராட்சியிலே தேவை எழவில்லையென்று சொன்னேன். இருந்தாலும்கூட, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் அந்தப் பகுதி மக்களுக்கு அவசியமாக குடிநீர் வேண்டுமென்று கேட்டிருக்கிறார். ஆகவே, கண்டிப்பாக, அவசியமிருப்பின் அதிகாரிகளால் ஆய்வு செய்யப்பட்டு, மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அண்ணன் அவர்களுடைய கவனத்திற்குக் கொண்டு செல்லப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. அ. பிரபு அவர்கள்.*

முற்பகல் 10–25

திரு. அ. பிரபு: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கள்ளக்குறிச்சி தொகுதி, கள்ளக்குறிச்சி நகராட்சியில் சுமார் 52,507 மக்கள் வசிக்கின்றார்கள். இந்தப் பகுதியில் மொத்தம் 6* OHT *இருக்கின்றன. வளர்ந்து வரும் நகரமான கள்ளக்குறிச்சி நகரத்திற்கு 10–வது வார்டிலும், 21–வது வார்டிலும்* OHT *தேவைப்படுகிறது. காரணம் என்னவென்றால், 4–வது வார்டிலே சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டு நிதியிலிருந்து 25 இலட்சம் ரூபாய் நிதியை ஒதுக்கி, தற்போது ஒரு திறந்தவெளிக் கிணறானது அமைக்கப்பட்டிருக்கிறது. அந்தக் கிணற்றிலிருந்து நாள் ஒன்றுக்கு சுமார் 10 இலட்சம் லிட்டர் தண்ணீர் கிடைக்கிறது. அந்தத்*

தண்ணீரானது நான்கு வார்டுகளுக்கு போதுமான அளவிற்கு இருக்கிறது. எனவே, அந்த நீரை சேமித்து மக்களுக்கு விநியோகம் செய்யும் அளவிற்கு 10 இலட்சம் லிட்டர் கொள்ளளவு கொண்ட ஒரு OHT அமைத்துத் தர மாண்புமிகு அமைச்சர் அவர்கள் நடவடிக்கை எடுக்க வேண்டுமென கேட்டுக்கொள்கிறேன். அதுமட்டுமல்லாமல், வளர்ந்து வரும் கள்ளக்குறிச்சி நகராட்சி, தற்போது மாவட்டமாக ஆகியிருக்கிறது. இந்த நகராட்சிப் பகுதியில் இன்னொரு OHT அமைத்துத் தந்தால் இன்னும் நன்றாக இருக்குமென்று மாண்புமிகு அமைச்சர் அவர்களை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாகக் கேட்டு அமர்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சிறப்புத் திட்டங்கள் செயலாக்கத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. எஸ்.பி. வேலுமணி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கள்ளக்குறிச்சி நகராட்சியில் உள்ள மூன்று வார்டுகளைக் குறிப்பிட்டு, சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டு நிதியிலிருந்து 25 இலட்சம் ரூபாய் ஒதுக்கி, அங்கே திறந்தவெளிக் கிணறு அமைக்கப்பட்டிருக்கிறது என்று சொல்லியிருக்கிறார்கள். அதேபோல, அங்கே மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி கட்டித் தந்தால் அங்கிருக்கக்கூடிய பகுதிகளுக்கு சரியான அளவில் distribution செய்யப்படும் என்று சொல்லியிருக்கிறார்கள். அதுகுறித்து துறை ரீதியாக ஆய்வு செய்யப்படும். அதேபோல, 10 இலட்சம் லிட்டர் கொள்ளளவு கொண்ட தண்ணீர்த் தொட்டி வேண்டுமென்று கேட்டிருக்கிறார். அவர் சொன்ன அளவுக்கு, தேவைப்படாது என்று நினைக்கிறேன். சுமார் 5 இலட்சம் லிட்டர் கொள்ளளவு உடையதாக இருந்தால் போதுமானதாக இருக்கும். ஆகவே, துறை அதிகாரிகள்மூலம் ஆய்வு செய்து, அங்கே அவசியம் இருப்பின், மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அண்ணன் எடப்பாடியார் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு செல்லப்படும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. எ.வ. வேலு அவர்கள்.

திரு. எ.வ. வேலு: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, குடிநீர் வடிகால் வாரியம், 1972 ஆம் ஆண்டில்

2020 ஜனவரி 9]

திரு. செ. கந்தப்பன் அவர்களைத் தலைவராகக் கொண்டு, தலைவர் கலைஞர் அவர்கள் ஆட்சியில் தொடங்கப்பட்டது. மக்கள் திலகம் எம்.ஜி.ஆர். அவர்கள் முதலமைச்சராக இருந்தபோதும் சரி, மாண்புமிகு அம்மையார் முதலமைச்சராக இருந்தபோதும், குடிநீர் வடிகால் வாரியம் மூலம் பாதுகாக்கப்பட்ட குடிநீர்த் தொட்டிகளைக் கட்டி, மக்களுக்குத் தண்ணீர் தொடர்ந்து வழங்கப்பட்டுக் கொண்டு வந்தது. இந்த வாரியம், 1972 ஆம் ஆண்டிற்கு முன்னால் உள்ளாட்சித் துறையின்கீழ் இருந்தது. எங்களுடைய வடக்கு பகுதியில் இருக்கிற மாவட்டங்களில் உள்ளவர்களெல்லாம் நரம்பு சிலந்தி வியாதியின் மூலமாகப் பாதிக்கப்பட்டபோதுதான் குடிநீர் வடிகால் வாரியம் அமைக்கப்பட்டது. இப்போது தொடர்ச்சியாக, சட்டமன்ற உறுப்பினர்களிடமிருந்து கோரிக்கை மனுக்கள் வரப்பெற்ற நிலையில், வாரியத்தில் போதிய நிதி இல்லாத சூழ்நிலையிலும், ஆங்காங்கே குடிநீர் வடிகால் வாரியம் மூலமாகப் பாதுகாக்கப்பட்ட தொட்டிகள் கட்டப்பட்டு வருகின்றன. சமீப காலமாக, உள்ளாட்சித் துறைக்கு மாற்றப்பட்டு, குடிநீர் வடிகால் வாரியம் ஒரு பராமரிப்புத் துறையாகத்தான் இருக்கிறதேயொழிய, புதியதாக பாதுகாக்கப்பட்ட தொட்டிகளெல்லாம் கட்டப்பட முடியாத நிலையில் இருக்கிறது. பொதுவாக, கோட்டப் பொறியாளர்களை அழைத்துப் பேசினால், 'எங்களுக்கு பணமே ஒதுக்குவதில்லை, நாங்கள் கட்ட முடியாது, நீங்கள் உள்ளாட்சித் துறையிடம் சொல்லுங்கள்' என்றுதான் சொல்கிறார்கள். எனவே, மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்கள் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களிடத்தில் இதுகுறித்து கலந்து பேச வேண்டும். பாதுகாக்கப்பட்ட குடிநீர்த் தொட்டிகள் கட்டப்பட வேண்டுமென்று சொன்னால், பெரும்பான்மையாக இருக்கின்ற 234 சட்டமன்ற உறுப்பினர்களும், எங்களுடைய கோரிக்கைகளை குடிநீர் வடிகால் வாரியம் மூலமாகக் கொடுப்பதன் மூலமாகத்தான் பாதுகாக்கப்பட்ட குடிநீர்த் தொட்டிகள் கிராமப் பகுதிகளுக்கு வர வாய்ப்பு இருக்கின்றது. இப்போது உள்ளாட்சித் துறையிடம் இருக்கின்ற நிதியை வைத்துக்கொண்டு, அவற்றைக் கட்ட முடிவதில்லை. மேலும், மாண்புமிகு அமைச்சர் அவர்களும் சொல்கிறார்கள்; அதிகாரிகளும், 'சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டு நிதியிலிருந்து கொடுங்கள் நாங்கள் கட்டித் தருகிறோம்' என்று சொல்கிறார்கள். ஆனால், இரண்டு கோடி ரூபாய் பணத்தைக் கொண்டு, நான்கு tanks *தான் கட்டமுடியுமேயொழிய, (குறுக்கீடு) 2½ கோடி ரூபாயில் கட்டுவதற்கு வாய்ப்பில்லை. ஆதலால், மாண்புமிகு அமைச்சர் அவர்கள் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களிடத்தில் சொல்லி,*

நிதியை கூடுதலாக ஒதுக்கினால், (குறுக்கீடு) நான் மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களுக்கும் சேர்த்துதான் பேசுகிறேன். கொஞ்சம் கூடுதலாக நிதியை நீங்கள் ஒதுக்கிறபோது, குடிநீர் வடிகால் வாரியம் மீண்டும் புத்துயிர் பெற்று, அனைத்து சட்டமன்ற உறுப்பினர்களின் கோரிக்கைகளையும் நிறைவேற்றுகின்ற வகையில் செயல்பட முடியும். குடிநீர் வடிகால் வாரியம் மீண்டும் புத்துணர்ச்சி பெறுமா, அதற்கு அதிகமான பணத்தை இந்த முறை நிதிநிலை அறிக்கையில் நீங்கள் ஒதுக்குவீர்களா, மீண்டும் குடிநீர் வடிகால் வாரியம் மூலமாகத் தொட்டிகள் கட்டப்படுமா என்பதை தங்கள் மூலமாக நான் அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சிறப்புத் திட்டங்கள் செயலாக்கத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. எஸ்.பி. வேலுமணி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் அமைச்சராக இருந்தவர். அவருக்கு நன்றாகத் தெரியும். அவர் சொன்ன கருத்துகள்கூட, நல்ல கருத்துகள்தான். இன்றைக்கு குடிநீர் வடிகால் வாரியம் மூலமாக மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டிகள் கட்டப்பட்டு வருகின்றன. அவர் சொல்வதுபோன்று, சில schemes-ஐப் பார்த்தீர்களென்றால், மாநகராட்சிமூலம் நிறைவேற்றப்படுகின்றன. அதில் மாற்றுக் கருத்தெல்லாம் இல்லை. இப்போது சுமார் 603 கோடி ரூபாய் மதிப்பீட்டில் திண்டுக்கல் மாவட்டம், நத்தம் கூட்டுக் குடிநீர்த் திட்டத்தின்கீழ் உள்ள பணிகளை TWAD Board-தான் செய்கிறது. அதேபோல, மதுரை மாநகராட்சியில், சுமார் 50 ஆண்டுக் காலத்திற்கு குடிநீர்ப் பிரச்சினை இல்லாத அளவிற்கு புதிதாக Scheme எடுக்கப்பட்டிருக்கிறது. அது Smart city என்பதால், AMRUT திட்டத்தின்கீழ்எடுக்கப்பட்டிருக்கிறது.மதுரைமாநகராட்சியின்மூலம் செயல்படுத்தப்படுகிறது. மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களின் அரசின் சார்பாக கடந்த எட்டு ஆண்டுகளிலே தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியம் மூலமாக, 11,140 மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டிகள் ரூ.842 கோடி மதிப்பீட்டில் கட்டப்பட்டிருக்கின்றன. நமக்கு அதிகமான schemes வரும்போது, பெரிய மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டிகளை முழுமையாக தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியம் மூலமாகச் செய்கிறோம்.

முற்பகல் 10–30

அதேபோல, சில மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டிகளைக் கட்டி அவற்றையும் அவர்களிடத்தில் ஒப்படைத்துவிடுகிறோம்.

2020 ஜனவரி 9]

இப்பொழுது ஊரக வளர்ச்சித் துறைமூலம் சின்னச் சின்ன தொட்டிகளை அதாவது அறுபதாயிரம் லிட்டர், அதிகபட்சம் ஒரு இலட்சம் லிட்டர் கொள்ளளவு கொண்ட தொட்டிகளைத்தான் கட்டுகிறார்கள். அதற்குத்தான் அந்த நிதி போதுமானதாக இருக்கிறது. அந்த நிதியில் அவ்வளவுதான் கொடுக்க முடியும். சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டு நிதி, நாடாளுமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டு நிதியிலிருந்து பெரிய மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டிகளைக் கட்டுவது கிடையாது. சில ஊர்களில் பொதுமக்கள் கேட்கிறபொழுது சட்டமன்ற உறுப்பினர்கள் தங்களுடைய பெயரைப் போட்டு கட்ட வேண்டுமென்று சொல்லி, கட்டிக்கொடுக்கிறார்கள். பெரிய பெரிய schemes *மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய அரசின் சார்பாக கடந்த 8 ஆண்டு ஆட்சிக் காலத்தில் நகராட்சி நிருவாகம் சார்பாக 414, சென்னை குடிநீர் வடிகால் வாரியம்மூலம் 43, பேரூராட்சிமூலம் 688, ஊராட்சிகள் மூலமாக 13,149, தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியம் மூலமாக 11,140 என மொத்தம் 25,434 குடிநீர்த் தொட்டிகள் 1,845 கோடி ரூபாய் மதிப்பீட்டில் கட்டப்பட்டுள்ளன. கண்டிப்பாக* TWAD Board *மூலமாகக் கட்டவேண்டுமென்று மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொன்ன கருத்தை மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் கவனத்திற்கு கொண்டுசென்று, இன்னும் கூடுதலாகத் தேவைப்படும் இடங்களில் கட்ட நடவடிக்கை எடுக்கப்படும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினா வரிசை எண் 20, மாண்புமிகு உறுப்பினர் திரு. வி. பன்னீர்செல்வம், மாண்புமிகு கைத்தறி மற்றும் துணிநூல் துறை அமைச்சர் அவர்கள்.*

20—

கோ-ஆப்டெக்ஸ் விற்பனை நிலையம்

***52752—திரு. வி. பன்னீர்செல்வம்:**

மாண்புமிகு கைத்தறி மற்றும் துணிநூல் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கலசப்பாக்கம் தொகுதி, கலசப்பாக்கம் பகுதியில் கோ–ஆப்டெக்ஸ் விற்பனை நிலையம் அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?